தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 229/ந/2022
நாள். 13.01.2023

திருமதி. I.குழந்தையம்மாள்,
பரமக்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
பரமக்குடி நகராட்சி. – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவரின் 12.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2022 அன்று பெறப்பட்டு 229/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பரமக்குடி நகராட்சியில் கடந்த 2020–21 ஆம் ஆண்டில் 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகள் செய்து முடித்து பில் தொகை பெற்றுள்ளேன். மேற்கண்ட வேலைகளின் பில் பட்டியலில் வருமான வரியாக ரூ 5,22,053/– பரமக்குடி நகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால் எனது வருமான வரி கணக்கில் 2020–21 ஆம் ஆண்டிற்கு ரூ 2,67,571/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதி ரூ 2,54,482/–ஐ செலுத்தச் சொல்லி, தான் பலமுறை மனு அளித்தும் நகராட்சியால் இதுவரை எனது வருமான வரி கணக்கில் பணம் செலுத்தப்படவில்லை. அதிலும் குறிப்பாக நான் TURIP 2019/2020 திட்டத்தின் கீழ் செய்த பணிக்கு 28.12.2021–ல் நான் வாங்கிய பில் தொகை ரூ 98,10,567/–க்கு பிடித்தம் செய்த வருமான வரி ரூ 1,05,459/–மற்றும் 14வது நிதி திட்டத்தில் 11.02.2021 மற்றும் 13.02.2021 தேதிகளில் எனது பில் தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட ரூ 39,813/– மற்றும் TURIP 2019/2020 திட்டத்தில் எனது பில் தொகையில் பிடித்தம் செய்த ரூ 1,09,210/– ஆகிய 3 தொகைகளையும் எனது வருமான வரி கணக்கில் இது நாள்வரை செலுத்த மறுக்கிறார்கள்.

அதே போல் 2021–2022 ஆம் ஆண்டில் நான் மொத்தம் 4 கோடியே 16 இலட்சத்து 77 ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பது ரூபாய் மதிப்பிலான பணிகள் செய்து முடித்து பில் தொகை பெற்றுள்ளேன். எனது பில் பட்டியலில் வருமான வரியாக ரூ 3,79,220/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எனது வருமான வரி கணக்கில் ரூ 2,65,528/– மட்டுமே செலுத்தப்பட்டு எஞ்சியுள்ள ரூ 1,14,000/– இதுவரை செலுத்தவில்லை.

காண்ட்ராக்டர்களின் பில் தொகையில் பிடித்தம் செய்கின்ற வருமான வரி பணத்தை உடனடியாக அவரவர் வருமான வரி கணக்கில் செலுத்த வேண்டும். ஆனால் 2 வருடமாகியும் இதுவரை செலுத்தவில்லை. மேலும் பலமுறை நகராட்சி ஆணையரிடம் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய முடியாமல் 2 வருடங்களாக தவிக்கின்றேன். வருமான வரி கணக்கு தாக்கல் செய்த படிவம் இருந்தால்தான் என்னால் டெண்டரில் கலந்து கொள்ள முடியும். நகராட்சியின் நடவடிக்கையால் எனது தொழிலும் முடக்கப்படுகிறது. எனவே உடனடியாக எனது வருமான வரிக்கணக்கில் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி தொகை 2020–21 ஆம் ஆண்டிற்கு ரூ 2,54,482/– மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ 1,14,000/– ஆகியவற்றை நகராட்சியால் செலுத்துவதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் பரமக்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

பரமக்குடி நகராட்சி ஆணையாளர் தனது 15.12.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்ததாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் பரமக்குடி நகராட்சியில் திட்டப்பணிகள் எடுத்து வேலை முடிக்கப்பட்டதற்கான பட்டியலில் 2% வருமானவரி பிடித்தம் செய்யப்பட்ட தொகை அனைத்தும் திருமதி.I.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கணக்கில் 2019–20, 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்கு வருமானவரி பிடித்தம் செய்த தொகை வருமானவரி துறைக்கு இணையதளத்தின் மூலமாக செலுத்திய விவரம் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையரும் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகுமாறு 21.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் உடல் நலக்குறைவின் காரணமாக கலந்து கொள்ள இயலாததால் அவரது ஒப்புதலின்படி, அவர் சார்பாக அவரது மகன் திரு.I.வின்சென்ட் ராஜா என்பவர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

எனது தாயார் திருமதி.I.குழந்தையம்மாள் கடந்த 2020–21 ஆம் ஆண்டில் பரமக்குடி நகராட்சியில் 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சாலைப் பணிகள் செய்து முடித்து பில் தொகை பெற்றுள்ளார். மேற்கண்ட வேலைகளின் பில் பட்டியலில் வருமான வரியாக நகராட்சியினர் ரூ. 5,22,053/– பிடித்தம் செய்துள்ளனர். அதில் 2,67,571/– ரூபாய் மட்டுமே செலுத்தி உள்ளனர், மீதி ரூபாய் 2,54,482/–ஐ செலுத்தச் சொல்லி பலமுறை மனு அளித்தும் அவர்கள் இதுவரை மேற்கண்ட தொகையினை, வருமானவரித் துறைக்கு செலுத்தவில்லை. தற்சமயம் மேற்கண்ட ரூ 2,54,482/– வருமானவரி துறைக்கு செலுத்தி விட்டார்கள்.

அதே போன்று 2021–2022 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ 4,15,77,980/– மதிப்பிலான பணிகள் செய்து முடித்து பில் தொகை பெறப்பட்டது. மேற்கண்ட பில் பட்டியலில் வருமான வரியாக ரூ.3,79,220/–ஐ பிடித்தம் செய்துள்ளனர். ஆனால் வருமான வரி கணக்கில் ரூ.2,65,528/– மட்டுமே செலுத்தி உள்ளனர். மீதம் ரூ.1,14,000/– தற்சமயம் செலுத்திவிட்டார்கள். இவ்வாறு வருமான வரியாக பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரித் தொகையை, வருமானவரித் துறைக்கு சரிவர செலுத்தாததால் எனது தாயாருக்கு வருமானவரித் துறையினரால் அபராதம் விதிக்க நேரிடுகிறது.

எனவே, நகராட்சி மூலம் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரித் தொகை முழுவதையும் வருமானவரித் துறைக்கு நகராட்சியால் உடனே செலுத்திட ஆவன செய்திடுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான பரமக்குடி நகராட்சி ஆணையர் சார்பாக பரமக்குடி நகராட்சியில் இளநிலைப் பொறியாளராக பணிபுரியும் திரு. A.P.சுரேஷ்பாபு மற்றும் நகராட்சியில் கணக்கராகப் பணிபுரியும் திருமதி. K.ஜெயசுதா ஆகியோர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்ததாரராக உள்ள திருமதி. I. குழந்தையம்மாள் என்பவரால் எடுக்கப்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கான பட்டியல் தொகையில் 2019–20, 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்கு பிடித்தம் செய்த 2 சதவீதத் தொகை, வருமானவரித் துறையில் ஒப்பந்ததாரர் திருமதி.I.குழந்தையம்மாள் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து அவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் இனி வரும் காலங்களில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகையை அவ்வப்போது வருமானவரித் துறையில், ஒப்பந்ததாரர் கணக்கில் செலுத்தப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் சார்பாக ஆஜரான அவரது மகனுடைய வாக்குமூலம், பரமக்குடி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, பரமக்குடி நகராட்சியின் இளநிலைப் பொறியாளர் மற்றும் நகராட்சியின் கணக்கர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பரமக்குடியை சார்ந்த மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் தனது 12.10.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், பரமக்குடி நகராட்சியால் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பணி ஆணையின்படி, பரமக்குடி நகராட்சியில் சாலைப்பணிகள் எடுத்து முடிக்கப்பட்டு, மனுதாரரின் கணக்கில் வருமானவரியாக பிடித்தம் செய்த தொகையில் 2020–21 ஆம் ஆண்டிற்கான ரூ 2,54,482/– மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்கான ரூ 1,14,000/– என ஆக மொத்தம் ரூ 3,68,482/– தொகை வருமானவரி கணக்கில் பரமக்குடி நகராட்சியால் செலுத்தப்படாமல், நிலுவையில் வைத்திருப்பதாக புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் பரமக்குடி நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் பெற்ற பணிகள் 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்டு, அதற்கான வருமானவரித் தொகை பரமக்குடி நகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்டு, ஆனால் பிடித்தம் செய்த தொகை முழுவதையும் மனுதாராது வருமானவரி கணக்கில் செலுத்தாமல், 2020–21 ஆம் ஆண்டில் ரூ 2,54,482 மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்குரிய ரூ 1,14,000 என மொத்தம் ரூ 3,68,482/– நிலுவையில் வைத்திருந்து, இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணையை மேற்கொள்ளும் சமயத்தில் அவசர கதியில் 18.11.2022 அன்று நிலுவையிலிருந்த தொகை முழுவதும் வருமானவரி கணக்கில் பரமக்குடி நகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளதை ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது.

இவ்வாறு, ஒப்பந்தாரர்களின் பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரித் தொகை உடனடியாக அவரவர் வருமானவரி கணக்கில் செலுத்தாமல் நகராட்சியால் நிலுவையாக வைப்பதால், ஒப்பந்ததாரர்கள் வருமானவரி கணக்கினை குறித்த நேரத்தில் தாக்கல் செய்ய முடியாமல், வருமானவரித் துறையால் விதிக்கப்படும் அபராதத் தொகை ஒப்பந்ததாரர்களால் எவ்வாறு ஈடு செய்ய முடியும். மேலும் வருமானவரி கணக்கு தாக்கல் செய்யாமல் இருந்தால் ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்டு எவ்வித ஒப்பந்தப்புள்ளிகளிலும் பங்கேற்ற தகுதியற்றவராக கருதப்பட வாய்ப்புள்ளது. இச்செயலானது நகராட்சி அலுவலர்களின் கடமை தவறிய செயலையும் உள்நோக்கத்துடன் இருந்ததையும் காட்டுகிறது. This is grave and blatant lapse on the part of the Municipality.

மனுதாரரின் வருமானவரி தொகையினை காலந்தாழ்த்தி செலுத்தியதற்கு காரணமான சம்பந்தப்பட்ட பரமக்குடி நகராட்சி ஆணையர், கணக்கர், மேலாளர் மற்றும் உதவியாளர் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், நகராட்சிகளின் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யும் வருமானவரித் தொகையினை நிலுவையின்றி அந்தந்த நிதியாண்டிற்குள் நகராட்சியால் / மாநகராட்சியால் செலுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்ற ஒரு சுற்றறிக்கையினை, அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளின் ஆணையாளர்களுக்கும் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The ULB has no authority or power to withhold the TDS amount from the contractors' bills from remitting into the IT Head of Account of the GOI Department in time. This kind of financial procedural indiscipline and stark violation deserve to be dealt with severely by initiating disciplinary action against the Commissioners down to the Accounts Section Officals who are responsible for this inordinate delay, defiance and default of serious nature. The DMA is instructed to chargesheet the delinquents and ensure that this trend does not continue unchecked in the other Muncipalities and Corporations by sending a strict circular forthwith.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.I.குழந்தையம்மாள்,
Y 16–A, 12/338, காமராஜர் நகர்,
பரமக்குடி – 623 707,
இராமநாதபுரம் மாவட்டம்,

2) ஆணையாளர், பரமக்குடி நகராட்சி,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/1/23
செயலாளருக்காக

17/01/23